ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 11.06.2024 திங்கட்கிழமை இதழ் : 163 பக்கங்கள் : 12




# ஐ.எம்.எவ். - ரணில் ஒப்பந்தத்தை எந்த ஆட்சியாளரும் மீறமுடியாது

## அமைச்சர் பந்துல குணவர்த்தன



கொழும்பு, ஜூன் 11

**யார் ஆட்சிக்கு வந்தாலும் 2028ஆம் ஆண்டு வரை ஐ. எம். எவ் வுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்த ஒப்பந்தம்தான் நடைமுறையில் இருக்கும் - அதனை மீறி செயல்பட முடியாது - இவ்வாறு போக்குவரத்து மற்றும் ஊடக அமைச்சர் பந்துல குண வர்த்தன தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு, எதிர்வரும் 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை தயாரிக்கும் போது யார் அரசாங்கத்தை நிர்வகித்தாலும் 2028ஆம் ஆண்டு வரை சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயல்பட வேண்டும்.

இந்த உடன்படிக்கையின்படி செயல்பட போகிறார்களா? இல்லையா? என்பதை ஆட்சிக்கு வர எதிர்பார்க்கும் தரப்பினர் முதலில் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

நாட்டில் பல்வேறு தரப்பினரும் போராட்டங்களையும் வேலை நிறுத்தங்களையும் முன்னெடுத்து வருகின்றனர். இதன்படி, அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் உள்ளிட்ட அரசாங்க சபைகளில் நிலவும் சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட சம்பளம் தொடர்பான பிரச்னைகளுக்குத் தீர்வு வழங்குவதற்காக ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அதற்கான தீர்வுகளை பரிந்துரை செய்து, 2025 வரவு - செலவுத் திட்டத்தில் முழுமையான தீர்வுகளை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில்

11



# வீட்டுச் சுவர் வீழ்ந்ததில் 2 மாதக் குழந்தை சாவு!

## வவுனியாவில் பரிதாபச் சம்பவம்

வவுனியா, ஜூன் 11

வீட்டின் சுவர் வீழ்ந்ததில் இரண்டு மாத குழந்தையொன்று பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் வவுனியா, புதிய வேலர் சின்னக்குளத்தில் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவில் வசிக்கும் சிந்துஜன் என்பவர் தனது மனைவி மற்றும் இரண்டு மாத குழந்தையுடன் உள்ள வவுனியாவில் உள்ள தனது தங்கையின் வீட்டுக்கு கடந்த 7 ஆம் திகதி சென்றுள்ளார்.

இவர்கள் நிகழ்வொன்றுக்காக வருகை தந்திருந்த நிலையில் தங்கையின் தற்காலிக வீட்டில் தங்கியிருந்த போது

11



# தமிழ் அரசு கட்சியினருடன் சஜித் பிரேமதாஸ சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாணம் வந்துள்ள எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான குழுவினருக்கும் இலங்கை தமிழ் அரசு கட்சியினருக்கும் இடையே சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று திங்கட்கிழமை இரவு தமிழ் அரசு கட்சியின் பணிமனையில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

11

# கச்சதீவு சர்ச்சை பிரசாரத்துக்காக மோடி மன்னிப்பு கேட்கவேண்டும்!


## காங்கிரஸ் கட்சி தெரிவிப்பு

புதுடில்லி, ஜூன் 11

பாராளுமன்றத் தேர்தலின்போது கச்சதீவு விவகாரத்தை எழுப்பிய பிரதமர் மோடி அதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று இந்தியாவின் காங்கிரஸ் கட்சி கூறியுள்ளது.

இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி மூன்றாவது முறையாக பதவியேற்றுள்ள நிலையில் காங்கிரஸ் கட்சியின் ராஜ்ய சபா உறுப்பினரான ஜெய்ராம் ரமேஷ், "கச்சதீவு விவகாரம் இலங்கையுடனான இந்தியாவின் உறவை

11



# இந்திய பிரதமர் மோடி இலங்கை வருகின்றார்

## அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவிப்பு

புதுடில்லி, ஜூன் 11

இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஓகஸ்ட் மாதம் இலங்கைக்கு வருவார் என்று இந்திய மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் பங்கேற்க சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அமைச்சர் சு. ஜெய்சங்கரும் நேற்று திங்கட்கிழமை சந்தித்து பேசினர்.

இதன்போதே, இந்திய பிரதமர் நரேந்திர மோடியின்

11



# சஜித்தின் நிகழ்ச்சிகளில் அங்கஜன், சுமந்திரன்!


வடமராட்சி, ஜூன் 11

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று வடமராட்சியில் பங்கேற்ற நிகழ்வுகளில் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன், சுமந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணம் வந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ பிரபஞ்சம் திட்டத்தின் ஊடாக பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் வகுப் பறை உபகரணங் களையும் - பல்வேறு

11

# மண்டைதீவு படுகொலை; நேற்று நினைவேந்தப்பட்டது



யாழ்ப்பாணம், ஜூன் 11

மண்டைதீவு கடலில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 38ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

உயிரிழந்த மீனவர்களின் நினைவாக குருநகரில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் படு கொலை

11

# ரயில் தொழிற்சங்கங்களின் பணிப்புறக்கணிப்பு நிறைவு

கொழும்பு, ஜூன் 10

புகையிரத தொழிற்சங்கங்களின் போராட்டம் நேற்று மாலையுடன் நிறைவுக்கு வந்தது. போக்குவரத்து அமைச்சருடனான சந்திப்பைத் தொடர்ந்தே போராட்டம் நிறைவடைந்தது.

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன மற்றும் ரயில் சாரதிகள் தொழிற்சங்கங்களுக்கு இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் அமைச்சு பணிமனையில் நடைபெற்றது.

இரண்டாம் வகுப்பு பதவி உயர்வு தாமதம், ஆட்சேர்ப்பு தாமதம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 4 நாட்களாக வேலை நிறுத் தம் மேற்கொள்ளப்பட் டமை குறிப்பி டத்தக்கது. (ஐ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

"மக்கள் மன்றில் ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமை, பொதுநிலைப்பாடும் பொதுவாக்கெடுப்பும்" என்ற பெயரில் தமிழ் அரசு கட்சியின் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் ஏற்பாடு செய்த "அறிவோர் ஒன்றுகூடும் அரசியல் கருத்துக்களம்" நடந்து முடிந்திருக்கின்றது.

அறிவோர் ஒன்றுகூடல் என்றால் மேலேயுள்ள தலைப்பு பற்றி அறிய விரும்புவோரா அல்லது அறிவுடையவர்கள் கருத்துக்களமா என்று புரியவில்லை.

அது எதற்காக கூட்டப்பட்டது என்பது வாசகர்களுக்கு தெரிந்ததுதான். அங்கு உரையாற்றிய சுமந்திரன், தமிழ் பொது வேட்பாளருக்கு எதிராக தான் பிரசாரம் செய்து அவரை படுதோல்வி அடையச் செய்வேன் - இதன்மூலம் அந்த முயற்சியை தோற்கடிப்பேன் என்று வீரசபதம் செய்திருக்கிறார். அதை தோற்கடிக்காமல் விட்டால் அது, தமிழ் மக்களின் உரிமை போராட்டத்துக்கு - சமஷ்டி கோரிக்கைக்கு எதிராக நடக்கின்ற சதிமுயற்சியை தடுக்காமல் விட்ட குற்றச்சாட்டுக்கு தானும் ஆளாகவேண்டும் என்றும் அங்கு உணர்ச்சி பொங்கக் கூறியிருக்கிறார்.

வழக்கமாக நிதானமாக, தான் சொல்ல வந்த கருத்துகளை அமைதியாக மக்களுக்கு எடுத்துச் சொல்கின்ற தனது பாணியிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது அவரின் அந்த உரை.

அவர் அங்கு சொல்லிய கருத்துகளுக்கு அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட நமது மூத்த அரசியல்வாதியும் சட்டத்தரணியுமான என். சிறிகாந்தா மிகச் சிறந்த பதிலை வழங்கி சுமந்திரனை மீண்டும் மேடைக்கு ஏறி பேச வைத்திருந்தார்.

அவர் சொன்ன விடயங்கள் அல்லது அங்கே முன்வைத்த கருத்துகள் பற்றி ஒவ்வொன்றாக பதில் எழுதுவது என்றால், இந்த வாரம் முழுவதும் இந்தப் பத்தியில் அதனையே எழுதிக்கொண்டிருக்கவேண்டும்.

சுமந்திரன் சொல்ல வந்தது, முக்கியமாக, சமஷ்டி கோரிக்கைதான் எமது அரசியல் கோரிக்கை என்பதை ஐம்பத்தியோராம் ஆண்டிலிருந்து தமிழ் மக்கள் ஒவ்வொரு தேர்தலிலும் நிரூபித்துவரும் நிலையில் அதுபற்றி மீண்டும் ஒரு வாக்கெடுப்பு நடத்தவேண்டிய தில்லை என்பதே அவரின் வாதமாக இருந்தது.

இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு, இருபத்தியிரண்டு எம்.பிக்களுடன் இருந்த சமஷ்டி கோரிக்கைக்கு - ஆதரவான எம்.பி.க்கள் தொகை இன்று எப்படி இருக்கின்றது என்பது அவருக்குத் தெரியாததல்ல. அதிகம் ஏன், கடந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழ் தேசியத்துக்கு ஆதரவான - அதாவது, சமஷ்டி கோரிக்கைக்கு ஆதரவான கட்சிகளுக்கு கிடைத்த வாக்குகள் வடக்கு - கிழக்கு முழுவதும் நான்கு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டுமே. ஆனால், அதற்கு எதிரானவர்கள் பெற்ற வாக்குகள் ஐந்து இலட்சத்து எண்பதாயிரத்துக்கும் அதிகமானது.

இப்படி ஒவ்வொரு விடயமாக பேசுவது தேவையற்றது என்பதால் அதனை விட்டுவிடுவோம். ஆனால், பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டால் அதற்கு எதிராக தான் பிரசாரம் செய்வேன் என்று அவர் அழுத்தம் திருத்தமாக அங்கு அறிவித்திருக்கிறார்.

எமது கேள்வி எல்லாம், கடந்த மே மாதம் பத்தொன்பதாம் திகதி வவுனியாவில் நடைபெற்ற தமிழ் அரசு கட்சியின் மத்திய செயல்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் பற்றி அவர் அறிந்து வைத்திருக்கவில்லையா என்பதுதான்.

"தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் அவசரமாக முடிவு எடுப்பதில்லை. ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே இது தொடர்பான இறுதி முடிவை எடுப்பது என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்தியகுழு தீர்மானித்துள்ளது."

இதுவே அந்தக் கூட்டம் பற்றி மறுநாள் ஈழநாடு வெளியிட்ட தலைப்பு செய்தி. பொதுவேட்பாளர் விடயத்தில் கட்சி இன்னமும் ஒரு முடிவை எடுக்காத நிலையில் கட்சியின் தலைவரும் முன்னால் அமர்ந்திருக்க - இவரோ, அதற்கு எதிராக தான் பிரசாரம் செய்வேன் என்றும் அதனை தோற்கடிக்க தன்னாலான வரை உழைப்பேன் என்றும் கர்ஜித்திருக்கிறார்.

யுத்தம் முடிவடைந்து இந்த பதினைந்து ஆண்டுகளில் - அல்லது அவர் தமிழ் அரசு கட்சிக்குள் கொண்டுவரப்பட்ட இந்த பதினைந்து ஆண்டுகளில் அவரும் சம்பந்தனும் தன்னிச்சையாக எடுத்த முடிவுகளே இன்று தமிழ் மக்களை தமிழ்த் தேசிய அரசியலை விட்டு தூரவிலக்கி வைத்திருக்கின்றன.

அதிகம் ஏன்?, தமிழீழ விடுதலை போராட்டத்துக்கு மிக உச்ச பங்களிப்பை செய்த அவரின் உடுப்பிட்டித் தொகுதியிலேயே அவரால் வெற்றிபெற முடியவில்லை என்பது மட்டுமன்றி, அது இன்று ஒரு தெற்கு தேசியக் கட்சி ஒன்றிடம் இருக்கின்றது. இன்று ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ் தேசிய ஆதரவு உறுப்பினர்களின் தொகை குறைந்து கொண்டே வருவதற்கு, சம்பந்தனும்- சுமந்திரனும் தன்னிச்சையாக எடுத்த முடிவுகளே காரணம். இதனை அண்மையில் சிங்கள புத்திஜீவிகளில் ஒருவரும் அரசியல் ஆய்வாளருமான குஷால் பெரேரா தனது கட்டுரை ஒன்றிலும் எழுதியிருந்ததும் கவனிக்கத்தக்கது.

இத்தனை தோல்விகளுக்கு பின்னரும் தமிழ் அரசு கட்சியை தன்னிச்சையாக வழிநடத்திச் செல்ல முனைவது, எதற்காக என்பதை இன்னும்தான் புரிந்து கொள்ளமுடியவில்லை.

கட்சி பொதுவேட்பாளர் விடயத்தில் ஒரு முடிவை எடுத்து, அது தேவையற்றது என்று கருதினால் அதற்காக பிரசாரம் செய்வதில் தவறிருக்காது. ஆனால், கட்சி இன்னமும் அதுவிடயத்தில் முடிவெடுக்காத நிலையில் அதனை எதிர்த்து பிரசாரம் செய்வேன் என்று கட்சித் தலைவரையும் வைத்துக்கொண்டு ஒருவர் அறிவிக்கிறார் என்றால், கட்சி எத்தகைய கட்டுக்கோப்பாக இருக்கின்றது என்பதற்கு விளக்கம் தேவையிருக்காது.

- ஊர்க்குருவி





யாழ்ப்பாணம் - நீராவியடி ஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் பெருந்திருவிழா நேற்று ஆரம்பமான தருணம்...! (படங்கள் - ஐங்கரன் சிவசாந்தன்)

## நித்தியசிறீக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்தி விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இந்தியாவின் பிரபல கர்நாடக இசை பாடகி நித்தியசிறீ மகாதேவனின் "தெய்வீக இசை கச்சேரி" நேற்றிரவு நடைபெற்றது.

இந்த இசை நிகழ்வில் பங்கேற்பதற்காக நித்தியசிறீ உள்ளிட்ட குழுவினர் பலாலி விமான நிலையம் ஊடாக நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர்.

யாழ்ப்பாணம் வந்த நித்தியசிறீ மகாதேவன் உள்ளிட்ட குழுவினரை பலாலி விமான நிலையத்தில் வைத்து பிரதம கணக்காளர் அகிலன், குடிவரவு - குடியகல்வு அதிகாரி ராஜ்குமார், இசை நிகழ்வின் அனுசரணையாளர் திருமதி நேதாஜி தேன்மொழி, மற்றும் ஜெயந்தி திவாகர் ஆகியோர் வரவேற்றிருந்தனர். (ஐ)



## யாழ். ஆயர் இல்லத்துக்கு எதிர்க்கட்சி தலைவர் வருகை!

யாழ்ப்பாணம், ஜூன் 11

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரமதாஸ நேற்று காலை யாழ். ஆயர் இல்லத்துக்கு சென்று யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளாரை சந்தித்திருந்தார்.

இதன்போது, மறைக்கோட்ட முதல்வர்கள், அருட்தந்தையர்கள் ஆகியோரும் எதிர்க்கட்சித் தலைவருடன் சந்தித்து கலந்துரையாடினர்.

13ஆவது திருத்தம் ,காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சனை, பொது வேட்பாளர் குறித்த அருட்தந்தையர்களின் கேள்விகளுக்கு சஜித் பிரேமதாஸ பதிலளித்தார்.

(ஐ- 01)



## அரசாங்கம் தீயநோக்கம் கொண்ட நடவடிக்கையை நிறுத்த வேண்டும்

### அச்சுறுத்தல்கள் குறித்து அநுரகுமார

கொழும்பு, ஜூன் 11

முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரட்ணவும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் ( சி. ஐ. டி) முன்னாள் இயக்குநர் ஷானி அபயசேகரவும் மக்கள் விடுதலை முன்னணியின் மஹரகம மாநாட்டில் கலந்து கொள்வதைத் தடுப்பதற்காக அரசாங்கத்தை சேர்ந்தவர்களும் எதிர்க்கட்சியை சேர்ந்தவர்களும் கடும் அழுத்தங்களைக் கொடுத்தனர் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார். அதே வேளை, அரசாங்கம் தீயநோக்கம் கொண்ட நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அரசியலின் இரு துருவங்களை சேர்ந்தவர்களும் மிரட்டல்கள் உட்பட பல வழிகளில் அழுத்தங்களை கொடுத்தனர். அர்த்தமற்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் தற்போதும் ரவி செனவிரட்ணவுக்கு எதிராக விசாரணைகள் இடம்பெறுகின்றன. அரசாங்கம் இந்தத் தீயநோக்கம் கொண்ட நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும்.

பொதுமக்களுக்கு தங்கள் விருப்பத்துக்குரிய எந்த கட்சிக்கும் ஆதரவளிப்பதற்கான உரிமையுள்ளது. அதற்கு அவர்கள் அரசாங்கத்தினதும் எதிர்க்கட்சியினதும் ஆதரவை பெறத்தேவையில்லை. அரசாங்கத்தினதும் எதிர்க்கட்சியினதும் செயல்பாடுகளை இவர்கள் நன்கு அறிந்தவர்கள் என்பதால் இவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.



எனினும், இந்த அழுத்தங்களுக்கு அப்பால் அவர்கள் துணிச்சலாக மக்கள் முன் பேசுவதற்கு முன்வந்துள்ளனர். அவர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டுள்ளதுடன் நாட்டில் சட்டத்தின் ஆட்சிக்கு என்ன நடந்தது என்பதை தெளிவுபடுத்தியுள்ளனர் எனவும் அநுர தெரிவித்தார்.

(எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

011.06.2024 திங்கட்க்கிழமை

குரோதி வருடம், வைகாசி 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# தமிழ் அரசு கட்சியின் நிலைமை

தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சி எதிர்பார்த்தது போன்று வேகமாக நகரவில்லை. ஆனாலும், முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அவ்வாறான முயற்சிகளை தடுக்கும் நோக்கில் தான் எம். ஏ. சுமந்திரன் ஒரு கூட்டத்தை நடத்தியிருந்தார். கூட்டத்தில் பேசியவர்கள் பெரும்பாலானவர்கள் தமிழ் பொது வேட்பாளர் ஒரு விஷப் பரீட்சை என்னும் தொனியிலேயே பேசியிருந்தனர்.

தமிழ் பொது வேட்பாளர் ஏன் தேவை? - அதன் முக்கியத்துவம் என்ன? - அதற்கு மாற்றான - அதனைவிடவும் சிறந்த யோசனை இருக்கின்றதா? என்னும் கேள்விகளின் அடிப்படையில் மக்கள் மத்தியில் பெருமளவில் உரையாடல்கள் இதுவரையில் நடைபெறவில்லை. தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை சரியென்று வாதிடும் அரசியல் கட்சிகள் இதுவரையில் மக்கள் மத்தியில் செல்லவில்லை. இது கட்சிகளின் பலவீனமாகும். சிவில் சமூக தரப்பினரும் பகிரங்க கலந்துரையாடல்களை மேற்கொள்ளவில்லை. இது சிவில் தரப்புகளின் பலவீனமாகும்.

"மக்கள் மனு" வடக்கு கிழக்கு சிவில் சமூகம் மக்கள் மத்தியில் மேற்கொண்ட கருத்தாய்வு நிகழ்வுகளை தவிர, இதுவரையில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரித்து எந்தவொரு பகிரங்க சந்திப்புகளும் நடைபெறவில்லை. இவ்வாறானதோர் இடைவெளியில்தான் சுமந்திரன் ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தார். சுமந்திரனோ அல்லது வேறு எவரோ தங்களின் கருத்துகளை முன்வைக்கும் உரிமை உள்ளவர்கள். ஜனநாயகத்தில் மாறுபட்ட கருத்துகள் இருப்பதும் சாதாரணமானதுதான். இங்கு பிரச்னை சுமந்திரனின் கருத்துகள் அல்ல. ஆனால், அவர் அதனை வெளிப்படுத்தும் முறைமைதான் பிரச்னையானது. அவரின் அணுகுமுறை தமிழ் அரசு கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் கேள்வியை எழுப்பியிருக்கின்றது.

தமிழ் பொது வேட்பளார் நிலைப்பாடு தொடர்பில் இலங்கை தமிழ் அரசு கட்சி இதுவரையில் அதன் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர்தான் தங்களுடைய நிலைப்பாட்டை அறிவிப்பதாகக் கூறியிருக்கின்றது. இவ்வாறானதொரு சூழலில் இந்த நிலைப்பாடு எதிர்க்கப்பட வேண்டும் - இதற்கு எதிராக பொது மக்கள் மத்தியில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சுமந்திரன் எந்த அடிப்படையில் கூறுகின்றார்? சுமந்திரனின் நிலைப்பாட்டை தமிழ் அரசு கட்சி ஏற்றுக் கொள்கின்றதா? கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சத்தியலிங்கம் முன்னிலையில்தான் இவ்வாறானதொரு கருத்தை சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். இதேவேளை, சிவஞானம் சிறீதரன் தமிழ் பொது வேட்பளார் நிலைப்பாட்டுக்கு ஆதரவான கருத்துகளை வெளியிட்டு வருகின்றார். இதில், தமிழ் அரசு கட்சியின் நிலைப்பாடு என்ன?

தமிழ் அரசு கட்சிக்கான புதிய தலைவர் தெரிவின் பின்னர் இடம் பெற்ற உள்முரண்பாடுகளை தொடர்ந்து தமிழ் அரசு கட்சியானது - ஒரு கட்சியென்னும் அடிப்படையில் மிகவும் பலவீனமான நிலையில் இருக்கின்றது. உண்மையில், பிறிதொரு வலுவான கட்சியின்மையே தமிழ் அரசு கட்சியின் ஒரேயொரு பலமாக இருக் கின்றது. இல்லாவிட்டால், எப்போதோ தமிழ் அரசு கட்சியின் அரசி யல் பயணம் முடிவுற்றிருக்கும். கட்சி, அதன் உத்தியோகபூர்வ முடிவை அறிவிப்பதற்கு முன்பாகவே இதுதான் நிலைப்பாடு - இப்ப டித்தான் செயலாற்ற வேண்டும் என்று சுமந்திரனால் ஆக்ரோஷமாகக் கூற முடிகின்றதென்றால் கட்சியின் பலவீனமே அதற்கான ஒரேயொரு காரணமாகும்.

# சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு கோரி நாளை நாடு முழுவதும் போராட்டம்

## ஆசிரியர் சேவை சங்கம் அறிவிப்பு

சாய்ந்தமருது, ஜூன் 11

சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு கோரி நாளை 12 ஆம் திகதி நாடு முழுவதும் வலய மட்ட அளவில் போராட்டங்களை முன்னெடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் ஏ. ஆதம்பாவா தெரிவித்தார்.

ஆசிரியர்கள், அதிபர்களுக்கு எழுத்து மூலம் வாக்குறுதியளிக்கப்பட்டிருந்த சுபோதினி அறிக்கையின் மூன்றில் இரண்டு பகுதி சம்பள முரண்பாட்டுத் தீர்வின்படி இன்னும் இரண்டு பகுதி வழங்கப்படாமையைச் சுட்டிக்காட்டி அதனைப் பெறுவதற்காக பல் வேறு பேச்சுகள் நடத்தியும் பலனில்லாத நிலையில் எமது ஆசிரியர், அதிபர் தொழிற் சங்கக் கூட்டணி போராட்டத்தில் ஈடுபடவுள்ளது எனவும் அவர் கூறினார்.

அம்பாறை, சாய்ந்தமருது அல் - கமரூன் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நாளை 12 ஆம் திகதி நாடு முழுவதும் வலய மட்ட அளவில் போராட்டங்களை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம். இந்தப் போராட்டத்தின் நோக்கத்தை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். நாங்கள் கேட்பது சம்பள அதிகரிப்பு அல்ல. சம்பள முரண்பாட்டுக்கான தீர்வுதான் எமக்கு வேண்டும். அதற்கான போராட்டமே இது. எனவே, எமக்கு முழு ஆதரவு தரவேண்டும்.

இதற்காக அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்து கல்வி வலையங்களிலும் உள்ள அதிபர், ஆசிரியர்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம். இதேவேளை, கடந்த காலங்களில் எமது போராட்டங்களில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பூரண ஒத்துழைப்பு கிடைக்கின்றபோதும் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் பேசும் அதிபர், ஆசிரியர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்ற ஒரு நிலை காணப்படுகின்றது. எனவே, தயவு செய்து இம்முறை எமது போராட்டத்துக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்- என்றார். (எ)

# 30 கோடி ரூபாய் பெறுமதியான ஹெரோயினுடன் மூவர் கைது!

கொழும்பு, ஜூன் 11

கஹதுடுவ பகுதியில் 30 கோடி ரூபாய் பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் டுபாயில் தலைமறைவாகியுள்ள அஹூங் கல்லே லொகு பட்டி என்பவரின் போதைப்பொருள் வர்த்தகத்தை நடத்தி வருபவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் பதுங்கியிருந்த வீட்டிலிருந்து 2 கைத்துப் பாக்கிகள் மற்றும் போலி இலக்கத் தகடுகள் பொருத்தப்பட்ட 2 கார்களும் கைப் பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# அஹுங்கல்ல லொகு பெடியின் உதவியாளர்கள் மூவர் கைது

## ரூ. 30 கோடி பெறுமதியான ஹெரோயின் பறிமுதல்

கொழும்பு, ஜூன் 11


டுபாயிலுள்ள பிரபல போதைப்பொருள் கடத்தல்காரனும் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவருமான அ/ஹங்கல்ல லொக்கு பெடியின் உதவியாளர்கள் மூவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கெஸ்பேவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

வீரவில, பாதுக்கை மற்றும் கல்கிஸ்ஸை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 24, 28 மற்றும் 48 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து 30 கோடி ரூபாய் பெறுமதியான 13 கிலோ 106 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**இடபம்**
உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்பீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். மகிழ்ச்சியான நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**சிம்மம்**
எதிர்காலம் பற்றிய பயம் வீண் டென்ஷன் வந்து செல்லும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவைப்படும் நாள்.

**கன்னி**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்பு கூடும் நாள்.

**துலாம்**
உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**விருட்சிகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும்.

**மகரம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**கும்பம்**
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மீனம்**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

# இலங்கை தமிழ் மக்களை பாதுகாக்க மோடி தமிழீழத்தை ஏற்படுத்த வேண்டும்

## வாழ்த்து செய்தியில் மதுரை ஆதீனம் தெரிவிப்பு

மதுரை, ஜூன் 11

“இலங்கையில் உள்ள தமிழ் மக்களை பாதுகாக்க பிரதமர் மோடி தமிழீழத்தை ஏற்படுத்த வேண்டும்.”, என மதுரை ஆதீனம் ஹரிஹர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தெரிவித்தார்.

இதன்போது அவர் கூறியவை வருமாறு,

மூன்றாவது முறையாக பிரதமராக பதவி ஏற்றுள்ள மோடிக்கும், மத்திய அமைச்சர்களுக்கும் எனது வாழ்த்துகள். இலங்கையில் இலட்சக் கணக்கான தமிழர்களே கொன்று குவிக்க காரணமானவர்களும் வெற்றி பெற்று விட்டார்களே என மன வருத்தம் உள்ளது.

இலங்கையில் உள்ள தமிழ் மக்களை பாதுகாக்க பிரதமர் மோடி தமிழீழத்தை ஏற்படுத்த வேண்டும். பிரதமர் மோடி எதையும் தாங்கும் இதயம் கொண்டவர். பாரதிய ஜனதா பெரும்பான்மையுடன் மீண்டும் ஆட்சி அமைத்து இருந்தால், மின்னணு வாக்கு பதிவு இயந்திரத்தில் பட்டனை அழுத்தியவுடன் பா. ஜ. கவுக்கு ஓட்டு விழுகிறது என கூறியிருப்பார்கள். ஜனநாயக நாட்டில் வெற்றி அல்லது தோல்வி என்பது மக்கள் கொடுக்கக்கூடிய தீர்ப்பாகும். இலங்கை தமிழர்களுக்கு ஆதரவு கொடுக்கும் அனைவருக்கும் நான் ஆதரவு கொடுப்பேன் - என்றார்.

# சீமான் கட்சியுடன் கூட்டணியா தலைவர் விஜயே முடிவெடுப்பார்!

## தமிழக வெற்றிக் கழகம்

சென்னை, ஜூன் 11

சீமானின் நாம் தமிழர் கட்சி உடன் கூட்டணி அமைத்து போட்டியிடுவது குறித்து தலைவர் விஜய்தான் முடிவெடுப்பார் என்று தமிழக வெற்றிக் கழக பொது செயலாளர் புஸ்ஸி ஆனந்த் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்சி பணிமனையை திறந்து வைத்த அவர் செய்தியாளர்களை சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும்,

சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் இரண்டு வருடங்கள் இருக்கின்றன - அவசரமே வேண்டாம். நாங்கள் இப்போதே மக்கள் பணியாற்றிக் கொண்டுதான் இருக்கிறோம். சீமானின் நாம் தமிழர் கட்சி உடன் கூட்டணி அமைத்து போட்டியிடுவது குறித்து தலைவர் விஜய்தான் முடிவெடுப்பார். நாங்கள் எங்கள் தலைவர் சொல்லும் பணிகளை செய்து கொண்டே இருக்கிறோம் - என்றார். (ஐ)

# விக்கிரவாண்டி தொகுதிக்கு ஜூலை 10இல் இடைத் தேர்தல்

சென்னை, ஜூன் 11

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் ஜூலை 10ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்த புகழேந்தி, உடல் நலக்குறைவு காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி உயிரிழந்தார். இதனை தொடர்ந்து 8ஆம் திகதி விக்கிரவாண்டி தொகுதி வெறுமையானதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் விக்கிரவாண்டி தொகுதிக்கான இடைத்தேர்தல் அறிவிப்பை இந்திய தேர்தல் ஆணையம் நேற்று வெளியிட்டுள்ளது. அதில் ஜூலை 10ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இத்தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் தாக்கல் எதிர்வரும் 14ஆம் திகதி தொடங்குகிறது. வேட்பு மனுத் தாக்கலுக்கான கடைசி நாள் எதிர்வரும் 21ஆம் திகதியாகும். (ஐ)

# தலைமையின் கட்டளையை ஏற்று நான் பணி செய்வேன்

## அண்ணாமலை தெரிவிப்பு

சென்னை, ஜூன் 11

தலைமை வழங்கும்பொறுப்பை ஏற்று பணி செய்வேன் என பா. ஜ. கவின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

3ஆவது முறையாக மோடி பிரதமராக நேற்றுமுன்தினம் பதவியேற்றார். இந்நிலையில், அண்ணாமலை மத்திய அமைச்சரானால் மாநில தலைவர் பதவியில் மாற்றம் ஏற்படும் எனக் கூறப்பட்டது.

ஆனால், தமிழ்நாட்டை சேர்ந்த எல். முருகன், நிர்மலா சீதாராமன், ஜெய்சங்கர் ஆகியோரே அமைச்சராகினர்.

இந்நிலையில், டில்லியில் தொலைக்காட்சி ஒன்று, மத்திய அமைச்சரவையில் இடம்பெறவில்லை. தமிழகத்தின் கட்சி பொறுப்பை கவனிப்பீர்களா”, என்று அண்ணாமலையிடம் கேள்வி எழுப்பியது.

இதற்கு பதிலளித்த அண்ணாமலை ‘தமிழ்நாடும் முக்கியம், எல்லாமேமுக்கியம். கட்சி தலைமை வழங்கும் பொறுப்பை ஏற்று பணி செய்வேன்’ என்றார். (ஐ)

# சீமானுக்கு வைரமுத்து வாழ்த்து

சென்னை, ஜூன் 11

தமிழ்நாட்டில் சீமானின் கட்சி கவனம் பெறுகிறது என்று கவிஞர் வைரமுத்து வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரம் பெற்றமைக்காகவே இந்த வாழ்த்தை அவர் தெரிவித்துள்ளார்.

அவரின் வாழ்த்து செய்தியில் மேலும் கூறப்பட்டவை வருமாறு,

“மக்களவைத் தேர்தலில் 8.19 விழுக்காடு வாக்குகள் பெற்றுத் தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரம் பெற்ற நாம் தமிழர் கட்சியையும் அதன் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானையும் பாராட்டுகிறேன்.

“ஆலின் விதையொன்று தனித்து நின்று ஓசையின்றித் துளிர்விடுவதும் இலைவிடுவதும்போல சீமானின் வளர்ச்சி கவனம் பெறுகிறது. இந்த வளர்ச்சியால் தமிழ்நாட்டு அரசியலில் அவரைப் பழிப்பது குறையாது. ஆனால் இனி - கழிப்பது இயலாது - வாழ்த்துகிறேன்”, என்றுள்ளது. (ஐ)

# முப்பெரும் விழா பிற்போடப்பட்டது

சென்னை, ஜூன் 11

தி. மு. க. கட்சியின் முப்பெரும் விழா எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை கோவையில் நடைபெறும் என்று அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் துரைமுருகன் விடுத்த செய்தியில்,

முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதியின் நூற்றாண்டு நிறைவு விழா, 40 பாராளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற முதலமைச்சரும், கழகத் தலைவருமான, மு. க. ஸ்டாலினுக்குப் பாராட்டுவதற்காக முப்பெரும் விழா ஏற்பாடு செய்யப்பட்டது.


ஏற்கனவே, அறிவிக்கப்பட்ட 14ஆம் திகதிக்கு பதிலாக எதிர்வரும் 15ஆம் திகதி மாலை 4 மணிக்கு விழா நடைபெறும். இதில், தேர்தலில் வெற்றி பெற்ற 40 எம். பிக்களும் பங்குபற்றுவர் - என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மீன்பிடியை கட்டுப்படுத்தவேண்டும்!

## முல்லைத்தீவில் போராட்டம் முன்னெடுப்பு





முல்லைத்தீவு, ஜூன் 11

**கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தக் கோரி முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.**


குறித்த போராட்டம் நேற்று இடம்பெற்றுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரனிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அரசாங்க அதிபர் கருத்து வெளியிடுகையில்-கடற்றொழிலாளர்கள் பிரச்சினைகளை நாம் அறிவோம். விரைவில் சட்டவிரோத நடவடிக்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

நேற்று முன்தினம் கிழக்கு மாகாண கடற்படை அதிகாரி மற்றும் உதவிப் பணிப்பாளர் சட்டவிரோத கடற்றொழிலை கட்டுப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடியுள்ளதோடு இது தொடர்பான 3ஆவது கூட்டம் தொடர்பாக கடற்தொழில் அமைச்சரிடம் கேட்டுள்ளோம்.

மேலும் நடைபெறவுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்போம்- என்றார்.

இந்த போராட்டத்தில் "கடல் வளத்தைபாதுகாக்க வேண்டிய அரசே ஏன் கடல் வளத்தை சுரண்ட துணை நிற்கிறாய்," "கடற்படையினரே சட்டவிரோத வெளிச்சம் உன் கண்களுக்கு தெரியவில்லையா," "அரசே சட்டவிரோத தொழிலுக்கு துணை போகாதே" போன்ற சுலோக அட்டைகளை ஏந்திய வண்ணம் மக்கள் போராட்டத்தில் ஈடு பட்டனர். (அ)



# பாடசாலை வான் மீது முறிந்து விழுந்த மரம்

## கண்டியில் ஐவர் காயம்

கொழும்பு, ஜூன் 11

கண்டி, திகன பிரதான வீதியின் கென்கல்ல பகுதியில் மரமொன்று முறிந்து வீழ்ந்து இடம்பெற்ற விபத்தில் ஐவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து நேற்று அதிகாலை 6 மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைவிடப்பட்ட காணி ஒன்றில் உக்கிய நிலையில் இருந்த மரமொன்றே இவ்வாறு வீழ்ந்துள்ளது.

இதன்போது திகன பகுதியிலிருந்து கண்டி நோக்கிப் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை ஏற்றிச் சென்ற வான் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

மரம் முறிந்து வீழ்வதை அவதானித்த சாரதி, வானை கட்டுப்படுத்த முயற்சித்த நிலையில், வான் கட்டுப்பாட்டை இழந்து சுவர் மற்றும் தூண் ஒன்றில் மோதுண்டுள்ளது.

இந்த விபத்தில் மூன்று மாணவர்கள், இரண்டு ஆசிரியர்கள் உள்ளிட்ட 6 பேர் பயணித்த நிலையில், ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், அவர்களின் நிலை கவலைக்கிடமாக இல்லை என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# ரயில் பயணிகள் நலன் கருதி மேலதிக பஸ்கள் சேவையில்

கொழும்பு, ஜூன் 11

ரயில் இயந்திர சாரதிகள் முன்னெடுத்துள்ள பணிப்பகிஷ்கரிப்பால் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டுள்ள நிலையில் நேற்று திங்கட்கிழமை மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

போக்குவரத்து அமைச்சால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கும் இலங்கை போக்குவரத்து சபைக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

ரயில் இயந்திர சாரதிகள் முன்னெடுத்துள்ள பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக நேற்று முன்தினம் காலை முதல் 35 ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டன.

கடந்த 06ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் அவர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இரண்டாம் வகுப்பு பதவி உயர்வு வழங்குவதில் தாமதம், ஆட்சேர்ப்பில் தாமதம் உள்ளிட்ட பல பிரச்னைகளுக்கு தீர்வு கோரி ரயில் இயந்திர சாரதிகள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

உரிய தீர்வு கிடைக்காத பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என லோகோமோட்டிவ் ஒப்பரேட்டிங் பொறியியலாளர்கள் சங்கத்தின் செயலாளர் எஸ்.ஆர்.சி.எம். சேனநாயக்க கூறியுள்ளார்.

இவர்களின் பணிபகிஷ்கரிப்பால் பயணிகள் சிரமத்தை எதிர்கொண்டிருந்தமை போக்குவரத்து அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதன்படி, அவிசாவளை, பொல்கஹாவெல, அளுத்கம, பாணந்துறை, சிலாபம், கம்பஹா மற்றும் நீர்கொழும்பு ஆகிய இடங்களிலிருந்து கொழும்பிற்கு செல்வதற்கான பஸ்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# கோடையில் கட்டாயம் பார்க்கவேண்டிய 3 பயண இடங்களின் பட்டியலில் இலங்கை!

கொழும்பு, ஜூன் 11

கோடை காலத்தில் கட்டாயம் பார்க்க வேண்டிய 3 பயண இடங்களில் ஒன்றாக இலங்கையை புகழ்பெற்ற சஞ்சிகையான போர்ப்ஸ் அங்கீகரித்துள்ளது.

இந்தப் பட்டியலில் முதலிடத்தில் கிரீஸும், இரண்டாம் இடத்தில் மொரீஷியஸின் சில இடங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதேநேரம் மூன்றாம் இடத்தில் இந்தியப் பெருங்கடலில் உள்ள தனித்துவமான தீவாக இலங்கையை குறிப்பிட்டுள்ளது. (அ)

# சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு நிலையத்தின் சிறுமிகள் பாலியல் நடவடிக்கைக்கு விற்பனை!

கொழும்பு, ஜூன் 11

கண்டி - வெலம்பொடை பிரதேசத்தில் உள்ள சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறுமிகளை பாலியல் நடவடிக்கைகளுக்காக விற்பனை செய்ததாகக் கூறப்படும் கண்காணிப்பாளரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு நிலையத்தில் சிறிது காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்த மடாட்டுகம பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுமியொருவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

தம்புள்ளை நீதவான் நீதிமன்றில் இருந்து கிடைக்கப்பெற்ற உத்தரவின் பிரகாரம் முறைப்பாடு செய்த சிறுமி கடந்த ஜனவரி மாதம் குறித்த சிறுவர் தடுப்பு நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

கண்காணிப்பாளரால் சிறுமிகள் பல்வேறு நபர்களுக்கு விற்கப்படுவதாகவும், சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு நிலையத்தில் உள்ள மருத்துவ அறையில் பாலியல் செயல்பாடுகளுக்கான வசதிகளை வழங்குவதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மடாட்டுகம பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி முறைப்பாடு செய்த சிறுமியின் மருத்துவ அறிக்கையை பெற்றுக்கொள்வதற்காக அவரை அநுராதபுரம் சட்ட வைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக வெலம்படை பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ.5000!

கொழும்பு, ஜூன் 11

முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவான 2500 ரூபாவை 5000 ரூபாவாக அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அகுனகொலபெலஸ்ஸ பிரதேசத்தில் முன்பள்ளி ஆசிரியர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றிலே விவசாய மற்றும் தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர இதனை தெரிவித்தார்.

இதன்படி, இலங்கையில் உள்ள சுமார் 34,000 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு எதிர்காலத்தில் இதே கொடுப்பனவு கிடைக்குமென அவர் கூறினார்.

கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவை உபகுழுக் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடியதாக தெரிவித்த அமைச்சர், முன்பள்ளி ஆசிரியர்களின் 2500 ரூபா கொடுப்பனவை 5000 ரூபாவாக அதிகரிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார். (அ)

# மாணவி சடலமாக மீட்பு

கொழும்பு, ஜூன் 11

கண்டி ரெலுகேஸ் இல 2 கெல்லாபோக்க மடுல்கலையில் காணாமல் போன ஹரிவதனி என்ற மாணவி நேற்று முன்தினம் சடலமாக கண்டெடுக்கப்பட்டார்.

குறித்த மாணவி கடந்த வெள்ளிக்கிழமை முதல் காணாமல் போயிருந்த நிலையில் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், குறித்த மாணவி தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார் என தெரியவந்துள்ளது.

உயிரிழந்த மாணவியின் சடலம் பிரேத பரிசேதனைக்காக கண்டி போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் கண்டிப்பாக நடக்கும்

## நாம் தயாராக வேண்டும் என்கிறார் திஸ்ஸ அத்தநாயக்க

கொழும்பு, ஜூன் 11

**ஜனாதிபதி தேர்தல் கண்டிப்பாக நடத்தப்படும். எனவே அதற்கு நாம் தயாராக வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.**



ஜனாதிபதித் தேர்தலில் புதிதாக 20 இலட்சம் உறுப்பினர்களை இணைத்துக் கொள்ள திட்டமிட்டுள்ளோம். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாச 55 இலட்சம் வாக்குகளைப் பெற்றார். அப்போது தனக்கு வாக்களிக்காத 20 இலட்சம் பேரை இணைத்து 75 இலட்சம் வாக்காளர் தளத்தைக் கட்டியெழுப்புவதே அவரது நோக்கமாகும் என்றும் திஸ்ஸ கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இருபது இலட்சம் புதிய உறுப்பினர்கள் என்பது பெரிய சவாலாக இல்லை. ஜனாதிபதி தேர்தலில் 12000 வாக்களிப்பு நிலையங்கள் செயற்படுகின்றன. இந்த ஒரு மையத்தில் இருந்து 160 வாக்குகளை அதிகப்படுத்தினால் இலக்கை அடையலாம்.

மேலும் ஜனாதிபதித் தேர்தல் கண்டிப்பாக நடத்தப்படும். எனவே அதற்கு நாம் தயாராக வேண்டும்.

சஜித் ஏன் சுயாதீன தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கு செல்லவில்லை என பலரும் கேட்கின்றனர். சுயாதீன தொலைக்காட்சியில் விவாதம் நடத்துமாறு நாங்கள் கேட்கவில்லை.

சஜித் அனுர விவாதத்திற்கு நாங்கள் தயார். இதற்காக அவரையும் அழைத்தோம். நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் தொடர்பான விவாதத்திற்கு நாங்கள் தயாராக உள்ளோம்.

ஒரு தலைவருக்கு ஒரு நாட்டை கட்டியெழுப்ப ஒரு குழு தேவை. அந்தக் குழுக்களிடையே விவாதம் நடத்துவதும் முக்கியம்.

நாட்டை எவ்வாறு கட்டியெழுப்புவது, பரிமாற்ற நெருக்கடியை எவ்வாறு சமாளிப்பது, வேலை வாய்ப்புகளை எவ்வாறு அதிகரிப்பது என பேசவேண்டும்.

அவ்வாறின்றி, நம்மிடம் அந்தக் கோப்பும் இந்தக் கோப்பும் இருக்கிறது என்று வாதிடுவதில் பயனில்லை-என்றார்.

(அ)

## நான்காவது நாளாகவும் தொடர்ந்தது ரயில் சாரதிகள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஜூன் 11

ரயில் சாரதிகள் குழுவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள பணிப்புறக்கணிப்பு நேற்று திங்கட்கிழமை நான்காவது நாளாகவும் தொடர்ந்தது என லோகோ மோட்டிவ் ஒப்பரேட்டிங் பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இரண்டாம் வகுப்பு பதவி உயர்வு தாமதம், ஆட்சேர்ப்பில் தாமதம் உள்ளிட்ட பல பிரச்னைகளை முன்னிறுத்தி கடந்த 06ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

எவ்வாறாயினும், லோகோ மோட்டிவ் ஆப்பரேட்டிங் பொறியியலாளர்கள் சங்கம் உள்ளிட்ட 05 தொழிற்சங்கங்களுக்கு தமது பிரச்னைகளை முன்வைத்து நெடுஞ்சாலைகள் அமைச்சில் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் கலந்துரையாடல் ஒன்றை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை 20 அலுவலக ரயில் சேவைகள் இயங்கவில்லை என லோகோமோட்டிவ் ஒப்பரேட்டிங் பொறியியலாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

(அ)

## 60 கிலோ கேரள கஞ்சாவுடன் வல்லிபுரத்தில் ஒருவர் கைது!


யாழ்ப்பாணம், ஜூன் 11

ஒரு கோடி ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் ஒருவர் வடமராட்சி வல்லிபுரம் காட்டுப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறையில் உள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கரவெட்டி சேட அதிரடிப் படையினருடன் இணைந்து பருத்திதுறை, வல்லிபுரம் காட்டு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 02 சாக்குகளில் அடைக்கப்பட்ட ஒரு கோடி ரூபாவிற்கும் அதிக பெறுமதியான 29 பொதிகள் அடங்கிய 60 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் வத்திராயன் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட கஞ்சாவும் கைது செய்யப்பட்டவரும் பருத்தித்துறை பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

(அ)



## கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலையின் திறன் விருத்தி வகுப்பறை திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

வடமராட்சி கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலைக்காக அமைத்துக் கொடுக்கப்பட்ட திறன் விருத்தி வகுப்பறை நேற்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாசவால் திறந்து வைக்கப்பட்டது.

முன்னதாக திறன் விருத்தி வகுப்பறையை திறந்து வைப்பதற்காக வருகை தந்த எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான குழுவினர் வெற்றிலை கொடுக்கப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்க்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் அ. பவானந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், ஐக்கிய மக்கள் சக்தியின் உப செயலாளர் உமா சந்திரா பிரகாஸ், ஐக்கிய மக்கள் சக்தியின் நல்லூர் அமைப்பாளர் தொழிலதிபர் கிருபாகரன், வட்டுக்கோட்டை தொகுதி அமைப்பாளர் மு.சதாசிவம், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இத் திட்டத்தின் கீழ் திறன் விருத்தி தொலைக்காட்சி, 5 கணனிகள் என்பன வழங்கப்பட்டிருந்ததமை குறிப்பிடத்தக்கது.

## மாடுகளைப் பாதித்துள்ள லம்பி தோல் நோய் தொற்று

கொழும்பு, ஜூன் 11

நுவரெலியா மாவட்டத்தில் அதிகமான பிரதேசங்களில் லம்பி தோல் நோய் எனும் ஒரு வகை பெரியம்மை நோய் மாடுகளைப் பாதித்து வருகிறது.

இது தொடர்பில் உரிமையாளர்கள் தெரிவிக்கையில்-

குறித்த நோயானது மாடுகளின் உடல் முழுதும் சிறியது முதல் பெரியது வரையான வீக்கங்களை உருவாக்கி உள்ளது. இந்த நோய் கடந்த முறையை விட மாறுபட்ட விதத்தில் சற்று வீரியத்துடன் மாடுகளைப் பாதிக்கத் தொடங்கியுள்ளது.

இதனால் பொருளாதாரம் கணிசமான அளவு பாதிக்கப்பட்டு வருவதோடு, இறப்பு வீதத்தை ஏற்படுத்தும் நோயாகவும் உள்ளதால் கவலை ஏற்பட்டுள்ளது-என்றனர்.

மிருக வைத்தியர்கள் தெரிவிக்கையில்-

கடந்த நாட்களில் நுவரெலியா மாவட்டத்தில் காணப்பட்ட மழையுடனான காலநிலையின் பின்னர் நுளம்புகள் ஏனைய பூச்சிகளின் பெருக்கம் அதிகரிப்பு காரணமாக குறித்த நோய் தீவிரமாகப் பரவலடைந்துள்ளது.

லம்பி நோயைக் கடத்தும் பூச்சிகள் முப்பது கிலோமீற்றர் வரை பறக்கக்கூடியதால் நுவரெலியா மாவட்டத்தில் அதிக இடங்களில் வேகமாக பரவ ஏதுவாக அமைந்திருக்கலாம். இதனால் தினமும் சராசரியாக ஐந்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்த நோய் அதிகளவு பசு மாடுகளையும் குறைவான அளவில் எருமை மாடுகளையும் தாக்குகிறது-என்றனர்.

(அ)

வீட்டில் மது விருந்து;

## நண்பனின் மனைவியை வன்புணர்ந்தவர் கைது!

கொழும்பு, ஜூன் 11

20 வயதுடைய திருமணமான பெண்ணொருவரை, கணவனின் நண்பர் ஒருவர் வன்புணர்வு செய்துள்ள சம்பவம் மொனராகலையில் இடம்பெற்றுள்ளது.

கரடுகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிடகும்புர தெல்கொல்ல பிரதேசத்தில் வசிக்கும் பெண்ணே இவ்வாறு கடந்த 07 ஆம் திகதி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பெண், அவரது கணவன், கணவனின் சகோதரர் மற்றும் கணவனின் தாய் ஆகியோர் ஒரே வீட்டில் வசிக்கின்றனர்.

கணவனின் தாய் அருகில் [illegible] றில் கலந்துகொள்வதற்காக சென்றிருந்த நிலையில், அவரது மனைவி சுகவீனம் காரணமாக உறங்கிக் கொண்டிருந்தார்.

அப்போது கணவர் தனது சகோதரர் மற்றும் மூன்று நண்பர்களுடன் வீட்டில் மது அருந்தியுள்ளார்.

மது அருந்தியவர்கள் சிறிது நேரம் வீட்டை விட்டு வெளியேறிவிட்டனர். அவர்களுடன் கணவனும் சென்றுவிட்டார். நண்பர்களில் ஒருவர் மட்டும் வீட்டில் நின்றுவிட்டார். அப்போது, அந்த பெண் உறங்கிக் கொண்டிருந்த அறைக்கு வந்து பலாத்காரம் செய்துள்ளார்.

எனினும், கடந்த 9 ஆம் திகதின்று வீட்டுக்கு திரும்பிவந்த அந்த சந்தேகநபர், நடந்த சம்பவத்தை யாரிடமாவது கூறினால் கொலை செய்து விடுவதாக மிரட்டியுள்ளார்.

எனினும், தனக்கு நேர்ந்த சம்பவம் தொடர்பில், கணவரிடம் தெரிவித்ததையடுத்து, இருவரும் கரடுகலை பொலிஸாரிடம் சென்று முறைப்பாடு செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களில் ஒருவரான பஹலபிட்டிய ரப்பர்வத்தை நாகல பிபில பிரதேசத்தை சேர்ந்த 32 வயதானவரை கைது செய்துள்ளனர்.

(அ)

## ரயிலில் இருந்து தவறி வீழ்ந்து ஒருவர் காயம்!

கொழும்பு, ஜூன் 11

ரயில் இயந்திர இயக்குநர்கள் சங்கம் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்துள்ள நிலையில் பொல்கஹவெலயிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் இருந்து தவறி வீழ்ந்து ஒருவர் காயமடைந்துள்ளார்.

ரயிலின் மிதிபலகைக்கு அருகில் இருந்து அவர் தவறி வீழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கனேமுல்ல ரயில் நிலையத்திற்கு அருகில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர் ராகமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் ஆளில்லா விமான கமெராக்கள் பயன்படுத்த அனுமதி கோரும் இந்தியா?

## பாதுகாப்பு அமைச்சிடம் விண்ணப்பிப்பு

கொழும்பு, ஜூன் 11

**வட இலங்கையின் மன்னார் தீவு உள்ளிட்ட பல இடங்களில் ஆளில்லா விமானக் கமெராக்களை பயன்படுத்தி படமெடுப்பதற்கு இந்தியா அனுமதி கோரியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இந்திய தூதரகத்தினால் இலங்கை அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்ட கோரிக்கை கடிதம் தற்போது பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

மன்னாரின் மணல் திட்டுகள், இராட்சத மரங்கள் மற்றும் நெடுந்தீவு உள்ளிட்ட எட்டு பிரபலமான இடங்களில் ஆளில்லா விமானக் கமெராக்களை பயன்படுத்தி படமெடுக்க அனுமதி கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு படமாக்கும் காட்சிகள் இலங்கைக்கு யோகாவை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சிக்கு பயன்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த விடயம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சை தொடர்புகொண்டு கேட்டபோது,

குறித்த விடயம் தொடர்பில் மேலதிக விடயங்களை ஆராய்ந்த பின்னரே பதிலளிக்க முடியும் என பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# காணி ஏல விற்பனையாளர்களுக்கு கடுமையாக்கப்படும் கட்டுப்பாடுகள்

கொழும்பு, ஜூன் 11

காணி ஏல விற்பனையாளர்கள் காணிகளை கொள்வனவு செய்பவர்களுக்கு தெரிவிக்காமல் வங்கிகளில் அடமானம் வைப்பதால் ஏற்படும் பிரச்சனைகள் அதிகரித்து வருவதாக பொது கணக்கு குழுவின் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர், அதற்கான சட்டரீதியான தீர்வொன்றின் அவசியத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தனகல்லையில் 300 காணிகள் ஏலத்தில் விடப்பட்டமை தொடர்பிலும், ஏலதாரர்கள் அடமானம் வைத்த காணியை மீட்காத காரணத்தினால் இந்த பிரச்னை எழுப்பப்பட்டதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் கடுமையான கட்டுப்பாடு தேவை எனவும்,

உள்ளூராட்சி அதிகாரிகளுக்கு அதிக பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், இது போன்ற செயல்கள் நடைபெறாமல் இருக்கத் தேவையான சட்ட நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (அ)

# கணேமுல்ல சஞ்சீவ பூஸாவுக்கு

கொழும்பு, ஜூன் 11

பாதாள உலக கும்பலின் தலைவரும் பிரபல போதைப்பொருள் கடத்தல் காரருமான கணேமுல்ல சஞ்சீவவை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்க கம்பஹா நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இவர் கடந்த 2023 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 13 ஆம் திகதி அன்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து, இவர் வீரகுல பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (அ)

# கைத்துப்பாக்கியுடன் "மாமியா" கைது!

கொழும்பு, ஜூன் 11

கைத்துப்பாக்கியை வைத்திருந்த நபர் ஒருவரை கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் சீதுவை வடக்கில் வசிக்கும் 34 வயதுடைய "மாமியா" என அழைக்கப்படும் நபர் ஆவார்.

இந்த கைத்துப்பாக்கியானது எந்த நாட்டில் தயாரிக்கப்பட்டதென இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தனது நாயை வைத்தியசாலை கொண்டு சென்ற பல்கலை மாணவி விபத்தில் சிக்கி உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன்

கொழும்பு-கண்டி பிரதான வீதியில் கேகாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மங்களகம பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் செல்லப் பிராணியான நாயுடன் பல்கலைக்கழக மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ரம்புக்கன, பொலத்தபிட்டிய பகுதியைச் சேர்ந்த ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 26 வயதுடைய பல்கலை மாணவியொருவரே உயிரிழந்துள்ளார்.

பல்கலை மாணவியின் செல்லப்பிராணியான நாய் கடந்த 4 ஆம் திகதி அன்று வீட்டின் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருக்கும்போது மரத்தில் மோதி காயமடைந்துள்ளது.

இதனையடுத்து இந்த பல்கலை மாணவி தனது நாயை கேகாலை தனியார் கால்நடை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார். நாயின் காலில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதால் நாயை பேராதனையில் உள்ள கால்நடை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லுமாறு வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து இந்த பல்கலை மாணவி கடந்த 7 ஆம் திகதி தனது தங்கை மற்றும் அயல் வீட்டில் வசிக்கும் இளைஞருடன் முச்சக்கரவண்டியில் தனது நாயை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

இதன்போது, எதிர்திசையில் பயணித்த லொறி ஒன்று இவர்கள் பயணித்த முச்சக்கரவண்டியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது முச்சக்கர வண்டியில் பயணித்தவர்கள் காயமடைந்துள்ள நிலையில் கேகாலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் பல்கலை மாணவி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்தின் போது பல்கலை மாணவியின் நாயும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து 58 வயதுடைய லொறியின் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# புதிய பொருளாதாரத்தை உருவாக்க முற்போக்கு சிந்தனை கொண்ட இளம் தலைமுறை அவசியம்

## கூறுகிறார் சாகல ரத்நாயக்க



கொழும்பு, ஜூன் 11

புதிய பொருளாதாரத்துடன் முன்னோக்கிச் செல்வதற்கு, முற்போக்கு சிந்தனை கொண்ட இளைஞர் சமூகம் அவசியம் என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

இலங்கையின் 05 ஆவது இளைஞர் பாராளுமன்றத்தின் 06 ஆவது அமர்வின் இரண்டாம் நாள், விசேட அதிதியாக கலந்துகொண்ட போதே சாகல ரத்நாயக்க இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த சாகல ரத்நாயக்க,

இன்றைய அமர்வில் இளைஞர் கொள்கை மற்றும் பொருளாதார மாற்ற சட்டம் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. இளைஞர்களின் எதிர்காலத்திற்காக நாட்டில் புதிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறார்.

1978/79 இல் ஆரம்பிக்கப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையே நாம் இந்த நாட்டில் கடைசியாக கண்ட புதிய பொருளாதாரமாகும்.

அதன்பிறகு, பொருளாதாரக் கொள்கைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், முற்றிலும் புதிய பொருளாதாரம் நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்படவில்லை. இதன் விளைவாக, ஒரு நாடாக நாம் போட்டியை எதிர்கொண்டு வேகமாக முன்னேற முடியவில்லை.

மேலும், நமது பொருளாதாரம் அரசியல் தாக்கங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டது. எங்கள் சிறு குழந்தைகளின் சிந்தனை மனப்பான்மை பாதிக்கப்பட்டது. ஒரு புதிய பொருளாதாரத்தை முன்னோக்கி நகர்த்துவதில், இளைஞர்களின் முற்போக்கான சிந்தனையும் அதனுடன் இணைந்து மேம்படுத்தப்படவேண்டும்.

பிள்ளைகளின் கல்வி, அறிவு, பயிற்சி ஆகியவற்றை வளர்க்கவில்லை என்றால், எத்தனை பொருளாதார சீர்திருத்தங்களை கொண்டு வந்தாலும், அதனால் பலன் பெற முடியாது.

ஜனாதிபதியும் இதனை ஒவ்வொரு தடவையும் சுட்டிக்காட்டுகின்றார். நாம் நகர்ந்து கொண்டிருக்கும் புதிய பொருளாதாரத்திற்குத் தேவையான பயிற்சிகளை இப்போதிருந்தே பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும். அதற்கு மனதை தயார்படுத்த வேண்டும். பிற்போக்கு சிந்தனைகளையும் பழைய எண்ணங்களையும் மாற்ற வேண்டும். நல்லவற்றை முன்னெடுத்துச் செல்லவேண்டும்-என்றார். (அ)

# விசாரணை தேவையில்லை என்கிறார் ஹர்ஷ டி சில்வா



கொழும்பு, ஜூன் 11

தமக்கு உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக தெரிவித்தமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டிய அவசியமில்லை என அரசாங்க நிதி தொடர்பான பாராளுமன்ற குழுவின் தலைவர் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அறிவித்துள்ளார்.

இதன்படி, ஹர்ஷ டி சில்வாவின் கோரிக்கை தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு திணைக்களம் அறிவித்துள்ளது.

தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக ஹர்ஷ டி சில்வா பாராளுமன்றத்தில் அறிவித்ததையடுத்து, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதனால் உயிர் அச்சுறுத்தல் தொடர்பில் வாக்குமூலம் பெறுமாறு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டது. அப்போது விசாரணை தேவையில்லை என்று தெரிவித்தார்.

விசாரணையை ஆரம்பித்தமைக்காக பொது பாதுகாப்பு அமைச்சர் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு தான் நன்றி தெரிவிப்பதாகவும்,

நாடாளுமன்ற சிறப்புரிமையின் கீழ் பாராளுமன்றத்தில் தாம் அவ்வாறு கருத்து தெரிவித்ததாகவும் ஹர்ஷ டி சில்வா தெரிவித்திருந்தார்.

அவர் தொடர்பில் அவ்வாறான விசாரணைகள் தேவையில்லை எனவும், தேவைப்பட்டால் மீண்டும் அறிவிப்பதாகவும் ஹர்ஷ டி சில்வா மேலும் தெரிவித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேசத்திலுள்ள விநாயகபுரம் சிறீ பத்திரகாளி அம்மனுக்கு விசேட கும்பாபிஷேக பெருவிழா சிறப்பாக நடைபெற்றது.

# வீதிக்கு இறங்கி போராடுவோம்

## திருமலை வேலையற்ற பட்டதாரிகள்



கிண்ணியா, ஜுன் 11

**அரசாங்கம் மிக விரைவில் எங்களது வேலையில்லாப் பிரச்னையை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இல்லையேல் வீதிக்கு இறங்கிப் போராடுவோம்- இவ்வாறு திருகோணமலை பட்டதாரிகள் தெரிவித்தனர்.**

பட்டதாரிகளுக்கான நியமனங்களை அரச துறையில் வழங்குங்கள் எனவும் திருகோணமலை வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

திருகோணமலை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் ஒன்றியத்தின் ஊடகச் சந்திப்பு கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

வேலையில்லாப் பிரச்னையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செவிமடுக்க வேண்டும். இது தொடர்பில் பாராளுமன்றத்தில் பேசுவதற்காக எங்கள் பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்களையும் நாங்கள் நாடியுள்ளோம்.

900 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் எந்தவிதமான வேலையும் இல்லாமல் வீதிகளிலும் ஏனைய இடங்களிலும் போராடுகிறார்கள்.


35 வயது கடந்துவிட்டது. எங்களுக்கு சரியான வேலையை பெற்றுத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

35 வயதுக்குப் பிறகு நிறுவனங்களிலும் உள்ளீர்ப்பு செய்வதற்கு மிகவும் கடினமாகும்.

உள்வாரி, வெளிவாரி, வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் என எவ்வித பாகுபாடுமின்றி எங்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

உரிய வயதில், உரிய வேலை வாய்ப்புகளை தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம் என பட்டதாரிகளால் அரசாங்கத்திடம் மேலும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

(எ)



# கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகை!

## 22 வயது இளைஞன் கைது

வவுணதீவு, ஜூன் 11

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை பிரதேசத்தில் சட்டவிரோதமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டுள்ளது.

வவுணதீவு பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு மற்றும் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவின் தகவலுக்கமைய இந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஞாயிற்றுக்கிழமை முற்றுகையிடப்பட்டது.

இந்தப் பகுதியில் அமைந்துள்ள நெடுஞ்சேனை ஆற்றை அண்டிய காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் சட்டவிரோதமாக இயங்கி வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, சந்தேகத்தின் பேரில் 22 வயதுடைய அதே பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் இந்த நடவடிக்கையில், 5 பீப்பாய் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் பதார்த்தங்கள், 150 போத்தல் கசிப்பு, கசிப்பு தயாரிக்கப் பயன்படுத்தும் சில உபகரணங்கள் உள்ளிட்டவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)



# மேலதிக அரசாங்க அதிபராக ஜெகராஜன் நேற்று பதவியேற்பு

அம்பாறை, ஜூன் 11

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக இலங்கை நிர்வாக சேவை தரம் 1 அதிகாரியான சிவஞானம் ஜெகராஜன் நேற்றுத் திங்கட்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றார்.

அம்பாறை மாவட்ட செயலகத்தில் அவருக்கான வரவேற்பு நிகழ்வு அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய பொது நிர்வாக அமைச்சு இந்த நியமனத்தை வழங்கியிருந்தது.

# காரைதீவு கூடைப்பந்தாட்ட கழகம் கிழக்கு மாகாணத்தில் சம்பியன்

களுதாவளை, ஜூன் 11

களுதாவளை கெனடி விளையாட்டுக் கழகம் நடத்திய கிழக்கு மாகாண கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் காரைதீவு கூடைப்பந்தாட்ட கழகம் வெற்றிவாகை சூடி சம்பியனானது.

இந்தச் சுற்றுத் தொடரில், கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 6 கூடைப் பந்தாட்ட கழகங்கள் பங்குபற்றின.

சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டியானது ஞாயிற்றுக் கிழமை களுதாவளை மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் பிற்பகல் 5. 30 மணியளவில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் காரைதீவு கூடைப்பந்தாட்ட விளையாட்டுக் கழகமும் சிவானந்தா கூடைப்பந்தாட்ட விளையாட்டுக் கழகமும் மோதின.



இதில், காரைதீவு கூடைப் பந்தாட்ட விளையாட்டுக் கழகம் 81 : 69 புள்ளி என்ற அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது.

காரைதீவு கூடைப்பந்தாட்ட விளையாட்டுக் கழகம் இந்தச் சுற்றுத்தொடரின் முதலாவது போட்டியில் சிவானந்தா கூடைப் பந்தாட்ட விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி, இரண்டாவது போட்டியில் தன்னாமுனை கூடைப்பந்தாட்ட கழகத்தை வென்று, அரை இறுதிப் போட்டியில் களுதாவளை மகா வித்தியாலய கூடைப்பந்தாட்ட அணியை வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகி சம்பியனானது.

(எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய பாராளுமன்ற தேர்தலில் தீவிர வலது சாரி கட்சிகள் ஆதிக்கம்

## பிரான்ஸ், ஜேர்மனி அரசியலில் குழப்பம்

பாரிஸ், ஜூன் 11

**ஐரோப்பிய பாராளுமன்றத்துக்கான தேர்தலில் தீவிர வலதுசாரி கட்சிகள் பெரும் வெற்றிபெறலாம் என்பதை தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியதை தொடர்ந்து ஐரோப்பாவில் நிச்சயமற்ற நிலை மேலும் அதிகரித்துள்ளது.**

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 27 நாடுகளில் மூன்று நாட்கள் இடம்பெற்ற தேர்தலின் முடிவுகள் வெளியாகத் தொடங்கியுள்ள நிலையில் தீவிர வலதுசாரி கட்சிகள் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெறலாம் என முன்கூட்டிய கருத்துக் கணிப்புகள் தெரிவித்துள்ளன.

720 ஆசனங்களில் 150 இற்கும் அதிகமான ஆசனங்களை வலது சாரி கட்சிகள் கைப்பற்றலாம் என கருத்துக்கணிப்புகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி போன்ற அதிக ஆசனங்களைக் கொண்டுள்ள நாடுகளில் தீவிர வலதுசாரிகள் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகள் அதிகளவில் காணப்படுகின்றன. பிரான்ஸில் மரைன் லெ பென்னின் தீவிர வலதுசாரி கட்சி வெற்றிபெறும் என்பது கருத்துக்கணிப்புகள் மூலம் தெரியவந்ததைத் தொடர்ந்து பிரான்ஸ் ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலுக்கான புதிய திகதிகளை அறிவித்துள்ளார்.

தீவிர வலதுசாரி கட்சி 31 வீத வாக்குகளை பெறும் மக்ரோனின் ரெனசான்ஸ் கட்சிக்கு 15 வீத வாக்குகளே கிடைக்கும் என கருத்துக்கணிப்புகள் தெரிவித்துள்ளன. சோசலிச கட்சிக்கு 14 வீத வாக்குகள் கிடைக்கும் என கருத்துக்கணிப்புகள் தெரிவித்துள்ளன.

பிரான்ஸில் மக்ரோனுக்கு ஏற்பட்ட பின்னடைவை போன்று ஜேர்மனியில் சான்சிலர் ஒலாப் ஸ்கோல்சும் பின்னடைவை சந்தித்துள்ளார். அவருடைய சோசல் டெமோகிரட் கட்சிக்கு 14 வீத வாக்குகளே கிடைக்கும். கிறிஸ்தவ ஜனநாயக கட்சிக்கு 29 வீத வாக்குகள் கிடைக்கும். தீவிர வலதுசாரி கட்சியான ஜேர்மனிக்கான மாற்றீடு கட்சி 16. 5 வீத வாக்குகளைப் பெறும் என கருத்துக்கணிப்புகள் தெரிவித்துள்ளன.

இந்தத் தேர்தல் முடிவுகள் அடுத்த ஐந்து வருடகாலத்துக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் அரசியல் பாதையைத் தீர்மானிக்கும்.

இந்தத் தேர்தல் முடிவுகள் தற்போது ஐரோப்பாவில் ஆளும் அரசாங்கங்கள் மீதான மக்களின் மனநிலையை வெளிப்படுத்துபவையாக கருதப்படுகின்றது. (எ)




# தீவிரவாதிகளின் தாக்குதலில் யாத்ரீகர்கள் 10 பேர் மரணம்!

சிறீ நகர், ஜூன் 11

இந்தியாவின் ஜம்மு காஷ்மீரின் ரியாசி மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை யாத்ரீகர்கள் பயணித்த பேருந்தின் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 10 பேர் உயிரிழந்தனர். இந்தச் சூழலில் உயிர் பிழைத்த ஒருவர் இறந்து போனது போல நடித்ததாக தெரிவித்தார்.

ரியாசியில் உள்ள சிவ் கோரி கோவிலுக்கு சென்றுவிட்டு கட்ரா நோக்கி யாத்ரீகர்கள் பேருந்தில் திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது பேருந்தை நோக்கி தீவிரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதனால், பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த நிலையில், பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விழுந்தது. இதில் 10 பேர் உயிரிழந்தனர். 33 பேர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதலில் உயிர்பிழைத்த நபர் ஆங்கில செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தவை வருமாறு, பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்த பிறகும் தீவிரவாதிகள் தாக்குதலை நிறுத்தவில்லை. தொடர்ந்து சில நிமிடங்கள் தாக்குதல் நடத்தினர். அதனால், நாங்கள் அமைதியாக இருந்தோம். உயிரிழந்தது போல நடித்தோம். அதன் பின்னர் தான் எங்களை மீட்புப் படையின் மீட்டனர்- என்றார். (எ)



# பெண்ணை விழுங்கிய இராட்சத மலைப்பாம்பு

ஜகார்த்தா, ஜூன் 11

இந்தோனேஷியாவில் 45 வயது பெண் ஒருவரை 16 அடி நீளமுள்ள மலைப்பாம்பு விழுங்கிய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மலைப்பாம்பின் வயிற்றை கிழித்து பார்த்த போது அதனுள் இறந்த நிலையில் குறித்த பெண் கண்டறியப்பட்டார். உடனே, மலைப்பாம்பை முழுமையாகக் கிழித்து அதன் வயிற்றில் இருந்து பெண்ணின் உடலை அவர் அணிந்திருந்த ஆடையுடன் வெளியே எடுத்ததாக அந்தக் கிராம மக்கள் தெரிவித்தனர். இதுபோன்ற சம்பவங்கள் அரிதாக நடப்பதாகக் கூறினாலும், இந்தோனேஷியாவில் கடந்த சில ஆண்டுகளில் மலைப்பாம்பு விழுங்கி பலர் உயிரிழந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ)

# பிரான்ஸ் பாராளுமன்றம் கலைப்பு

## தேர்தலுக்கு ஜனாதிபதி அழைப்பு

பாரிஸ், ஜூன் 11

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் அந்த நாட்டு பாராளுமன்றத்தை கலைத்துள்ளார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதாக அறிவித்த அவர், ஜூன் 30 மற்றும் ஜூலை 7ஆம் திகதிகளில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்றும் அறிவித்துள்ளார்.

ஐரோப்பிய தேர்தல்கள் ஜூன் 6 முதல் 9 ஆம் திகதி வரை ஐரோப்பிய ஒன்றியம் முழுவதும் நடைபெற்றது. அதில், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் கட்சி தோல்வியடைந்துள்ளது.



இந்த நிலையில், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் அந்த நாட்டு பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலுக்கு அழைப்பு விடுத்துள்ளார். (எ)

# இஸ்ரேலின் தாக்குதலில் 274 பலஸ்தீனர்கள் பலி

காஸா, ஜூன் 11

4 பணயக் கைதிகளை மீட்பதற்காக இஸ்ரேல் நடத்திய கொடூரத் தாக்குதலில் 274 பலஸ்தீனர்கள் பலியாகினர்.

இதேவேளை, இஸ்ரேல் படைகளின் தாக்குதலில் சிக்கி காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

4 பணயக் கைதிகளை மீட்பதற்காக இஸ்ரேல் படைகள் நடத்திய பயங்கரத் தாக்குதல்களில் 274 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாகவும், சுமார் 700 பேர் காயமடைந்ததாகவும் காஸா சுகாதார அமைச்சு நேற்றுத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பணயக் கைதிகள் மீட்புப் பணியின்போது இஸ்ரேல் படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதால் மிகப் பெரிய அளவில் பதிலடி கொடுக்கப்பட்டதாக இஸ்ரேல் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## எல்லையில் ஒலிபெருக்கி மூலம்

# வடகொரியாவுக்கு எதிராக தென்கொரியா பிரசாரம்

சியோல், ஜூன் 11

வடகொரியாவுக்கு எதிராக தென்கொரியா ஒலிபெருக்கி மூலம் பிரசார நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளது. இதனால் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

கொரிய தீபகற்பத்தில் ஏவுகணை மற்றும் அணு ஆயுதச் சோதனைகளை வடகொரியா நடத்தி வருகிறது. இந்த நிலையில் தற்போது நூற்றுக்கணக்கான ராட்சத பலூன்களை தென்கொரியா எல்லைக்குள் வடகொரியா பறக்க விட்டுள்ளது.

இதன்மூலம் சிகரெட் துண்டுகள், மின் சாதன கழிவுகள் உள்ளிட்ட குப்பைகளை தென்கொரியா எல்லைக்குள் வடகொரியா கொட்டி வருகிறது. இதனால் ஆத்திரம் அடைந்த தென்கொரியா 2018 இல் போடப்பட்ட வடகொரியா உடனான இராணுவ ஒப்பந்தத்தை ரத்து செய்தது. வடகொரியாவுக்கு எதிரான பிரசார ஒலி பெருக்கியை தென்கொரியா மீண்டும் தொடங்க முடிவு செய்துள்ளது. இதன்படி வடகொரியா தலைவர் கிம் ஜாங் உன் எதிர்ப்பு பிரசாரம் மற்றும் பிரபல தென்கொரிய பாடல்கள் போன்றவை ஒலிபெருக்கி மூலம் ஒலிபரப்பப்படும்.

மேலும், வடகொரியாவுக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய சுமார் 2 இலட்சம் துண்டுச்சீட்டுகளும் தென்கொரிய எல்லையில் பறக்க விடப்படவுள்ளன. இது வடகொரியா தலைவர் கிம் ஜாங் உன்னின் கோபத்தை தூண்டும் என சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் ஆட்சியில் நீடிப்பாராயின் மக்கள் வீதிக்கு இறங்க நேரிடும்!

## எச்சரிக்கிறார் சீலரத்ன தேரர்

கொழும்பு, ஜூன் 11

“ரணில் விக்ரமசிங்க மேலும் 2 வருடங்களுக்கு ஆட்சியில் நீடிப்பாராயின் மக்கள் வீதியில் இறங்கி போராட்டங்களை முன்னெடுக்கும் நிலை ஏற்படும்” என பத்தமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்தார்.

மீரிகம பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் அரசியல் கட்சிகள் பல தமது கட்சி சார்பாக வேட்பாளர்களை முன்னிறுத்த முடியாதநிலையில் உள்ளனர்.

பாலித ரங்கே பண்டார தேர்தலை பிற்போடுவதற்கு முயற்சிக்கின்றார். ரணில் விக்ரமசிங்க இந்த நாட்டில் மேலும் 2 வருடங்களுக்கு இந்த நாட்டில் ஆட்சியில் நீடிப்பாராயின் சில பிரச்னைகள் தோற்றம் பெறும். மக்கள் வீதியில் இறங்கி போராட்டம் முன்னெடுக்கும் நிலையும் ஏற்படும்.

ஒரு சில தரப்பினர் முதலில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என கூறுகின்றனர். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக இந்த நாட்டில் பொதுத் தேர்தல் இடம்பெற்றால். ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி தேர்தலை நடத்தமாட்டார்-என்றார். (அ)

# பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கடனை செலுத்துவதற்கு தீர்மானம்

கொழும்பு, ஜூன் 11

பெற்றோலிய கூட்டுத்தாபனம் மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி ஆகியவற்றிற்கு செலுத்தவேண்டிய கடனை செலுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.


தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சகால ரத்நாயக்க, இரு அரச வங்கிகளின் தலைவர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நாட்டில் எரிபொருள் பிரச்னை ஏற்படுவதற்கு முன்னரே, பெற்றோலிய நிறுவனத்தின் கடன் சுமை படிப்படியாக அதிகரித்து, எரிபொருள் பிரச்னை தோன்றியதன் மூலம் கடன் வேகமாக வளர்ந்தது என இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரச வங்கிகளை மறுசீரமைக்கும் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தின் கீழ் ஒரு நடவடிக்கையாக இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பெற்றோலிய கூட்டுத்தாபனம் அந்தந்த வங்கிகளுக்கு 450 மில்லியன் டொலர்களை செலுத்த வேண்டியுள்ளதாகவும் கணக்கிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பங்களாதேஷ் பிரதமரை சந்தித்த ஜனாதிபதி ரணில்



கொழும்பு, ஜூன் 11

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவை நேற்று திங்கட்கிழமை சந்தித்து கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவிப் பிரமாண நிகழ்வில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த சனிக்கிழமை நாட்டிலிருந்து புறப்பட்டிருந்தார்.

அந்த விஜயத்தின் ஒரு பகுதியாக இந்த சந்திப்பு புதுடில்லியில் இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் செயல்பாடுகளில் ஈடுபடமாட்டோம்!

## கூறுகிறார் சுனில் ஹந்துனெத்தி



கொழும்பு, ஜூன் 11

“பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் நடவடிக்கைகள் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் முன்னெடுக்கப்படமாட்டாது” என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் கடமையை சரிவர செய்யாமையினாலேயே இன்று நாட்டில் பாரிய பிரச்னைகள் ஏற்பட்டுள்ளன.

கடந்த 75 வருட ஆட்சி தொடர்பில் மக்கள் அதிருப்தியிலேயே உள்ளனர். விரைவில் இந்த நாட்டில் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் ஸ்தாபிக்கப்படும். நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான பொருளாதார கொள்கை திட்டம் எம்மிடம் உள்ளது. இன்று நாட்டில் மக்கள் பல நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர்.

திறந்த பொருளாதாரத்தின் பிரதிபலன்களையே இந்த நாட்டு மக்கள் இன்று அனுபவிக்கின்றனர்.

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் புதிய நாட்டின் அனைத்து துறைகளும் பலப்படுத்தப்படும். மக்களுக்கு இடையூறான செயற்பாடுகள் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் முன்னெடுக்கப்படமாட்டாது-என்றார். (அ)

# 8ஆவது சமகால முகாமைத்துவ ஆய்வு மாநாடு நாளை ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 11

“உலகளாவிய நிலைபேண் தன்மைக்கான ஊக்கமளிக்கும் மாற்றம்” என்ற ஆய்வுக் கருப்பொருளிலான 8ஆவது சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வு மாநாடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீட மண்டபத்தில் நாளை ஆரம்பமாகவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் ஏற்பாட்டில் நாளை, நாளை மறுதினம் 13 ஆகிய இரு தினங்களும் இந்த ஆய்வு மாநாடு இடம்பெறவுள்ளது.

முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் ந. கெங்காதரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த ஆய்வு மாநாட்டில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் சைமன் பெல் மற்றும் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் டி.என். ஜெயந்தா ஆகியோர் முதன்மைப் பேச்சாளர்களாகக் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆய்வாளர்கள் பலர் கலந்து கொள்ளவுள்ள இந்த ஆய்வு மாநாட்டில் வணிகங்களை முகாமை செய்தல், மனிதவள முகாமைத்துவம், நிறுவன நடத்தை, வணிகத் தொழில்நுட்பம், நிதி மற்றும் கணக்கியல், சந்தைப்படுத்தல், சுற்றுலாத் துறை மற்றும் பொருளாதார சமூககொள்கைகள் போன்ற ஆய்வுப் பரப்புகளை கொண்ட ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

நிலைபேண் தன்மைக்கான ஊக்கமளிக்கும் மாற்ற விருத்தியினை ஏற்படுத்தக்கூடிய சர்வதேச அளவிலான அபிவிருத்தியை நோக்கியதான பார்வையை புரிந்துகொள்ளவும் உள்வாங்கவும் திறந்த புலமைத்துவக் கலந்துரையாடல் நாளை மறுதினம் 13 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாண வளாகம் எனும் பெயரில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஒரு அங்கமாக ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து பொன்விழாக் காணும் அதேவேளை முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம் இருபத்தி ஐந்து வருடங்களை பூர்த்தி செய்து வெள்ளிவிழாக் காண்கின்றது.

பல்கலைக்கழகத்தின் பொன்விழா மற்றும் பீடத்தின் வெள்ளிவிழாவின் அடையாளமாக இந்த மாநாடு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# அம்பாந்தோட்டையில் சூடு; வர்த்தகர் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 11

அம்பாந்தோட்டை ரன்ன பிரதேசத்தில் நேற்று முன் தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அம்பாந்தோட்டை, ஹூங்கம திஸ்ஸ வீதி, ரன்ன பிரதேசத்தில் கட்டுமானப் பொருட்கள் விற்பனை செய்யும் கடையொன்றின் உரிமையாளர் ஒருவர் மீதே இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

நேற்று இரவு இடம்பெற்ற இந்தத் தாக்குதலில், குறித்த பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கட்டுமானப் பொருட்கள் விற்பனை செய்யும் கடை ஒன்றை நடத்தி வரும் இவர், நேற்று முன் தினம் இரவு முதலாம் மாடியில் இருந்து கீழே இறங்கி வந்து கொண்டிருந்த போது, இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக ஹூங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கையில் முட்டை உற்பத்தி அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன் 11

இலங்கையில் மாதாந்த முட்டை உற்பத்தி ஐந்து முதல் ஆறு இலட்சம் வரை அதிகரித்துள்ளதாக முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் செயலாளர் எச்.எம்.பி.ஆர். அழகக்கோன் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டின் மாதாந்த முட்டை நுகர்வு சுமார் ஒரு மில்லியனால் அதிகரித்துள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது சந்தையில் பல விலைகளில் முட்டை விற்பனைக்கு வருவதால், மக்கள் எளிதில் வாங்கிச் செல்கின்றனர் என முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசுபொருளாக மாறவுள்ள பொன்சேகாவின் புத்தகம்?

கொழும்பு, ஜூன் 11

போர் தொடர்பில் இறுதிக் கட்ட போரை வழிநடத்திய முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எழுதியுள்ள நூல் இம்மாத நடுப்பகுதியில் வெளியிடப்படவுள்ளது என தெரியவருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலொன்று நடைபெறவுள்ள நிலையில் குறித்த நூல் வெளிவருவதால் தேர்தல் களத்திலும் அந்நூல் பேசுபொருளாக மாறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

போர் தொடர்பில் இதற்கு முன்னர் இரண்டாம் நிலையில் இருந்த தளபதிகள் நூல் எழுதி இருந்தாலும், இறுதிக்கட்டப் போரை வழிநடத்திய இராணுவத் தளபதியால், எழுதப்பட்டுள்ள முதல் நூல் இதுவாகும்.

முக்கியமான இரகசியங்களை குறித்த நூல் ஊடாக பொன்சேகா அம்பலப்படுத்தக்கூடும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# சிறுவர்களுக்கு எதிரான வன்முறை அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன் 11

நாட்டில் பாடசாலை மாணவர்களிடையே சமூக வலைத்தளங்களின் பாவனை அதிகரித்துள்ள நிலையில், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக குடும்ப சுகாதாரப் பணியகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் சிறுவர்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் பாலியல் கொடுமைகள் அதிகரிப்பதற்கு பெற்றோரின் பொறுப்பற்ற நடத்தையும் காரணமாகவுள்ளதாகவும் குறித்த பணியகம் கூறியுள்ளது.

எனவே, சமூக வலைத்தளங்களால் தங்களுடைய பிள்ளைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை பெற்றோர்கள் புரிந்துக்கொள்வது மிகவும் அவசியம் என குடும்ப சுகாதாரப் பணியகம் வலியுறுத்தியுள்ளது.

குழந்தைகள் தற்செயலாக ஆபாசமான மற்றும் வன்முறையான சம்பவங்களுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்பதால், பெற்றோர்கள் அல்லது பெரியவர்கள் இவ்விடயத்தில் அதிக கவனத்துடன் இருக்க வேண்டும் எனவும் குடும்ப சுகாதாரப் பணியகம் வலியுறுத்தியுள்ளது.

# தோட்ட தொழிலாளர்களுக்கு ரூ. 1,700 சம்பளம் கிடைத்தது

மாத்தளை, ஜூன் 11

1,700 ரூபாயாக அதிகரிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் நேற்று முதன் முறையாக மாத்தளை எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1700 ரூபாயாக உயர்த்துவதற்குத் தொழிலாளர் நாயகம் தீர்மானித்திருந்தார்.

எவ்வாறாயினும், இலங்கைப் பெருந்தோட்ட நிறுவனம் மற்றும் தோட்ட உரிமையாளர்கள் சங்கமும் இவ்வாறான சம்பள அதிகரிப்புக்கு உடன்படப்போவதில்லை என தொடர்ந்தும் தெரிவித்து வந்தன.

இந்த நிலையில், அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு அமைய தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை வழங்குவதற்கு மாத்தளை எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம் நேற்று நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி நேற்றுப் பிற்பகல் மாத்தளை எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட நாளாந்த சம்பளம் வழங்கப்பட்டது. (எ)

# இலங்கை - பங்களாதேஷ் இடையே விரைவில் பயணிகள் படகு சேவை

டில்லி, ஜூன் 11

இலங்கைக்கும் பங்களாதேஷூக்கும் இடையில் விரைவில் பயணிகள் படகு சேவையை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் பங்கேற்கச் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பங்களாதேஷ் பிரதமர் ஷேய்க் ஹசீனாவுக்கும் இடையிலான இரு தரப்பு கலந்துரையாடல் டில்லியில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கூடிய விரைவில் கைச்சாத்திடப்படும் என ஜனாதிபதி ரணில், பங்களாதேஷ் பிரதமருக்கு தெரிவித்தார்.

அத்துடன் இலங்கைக்கும் பங்களாதேஷூக்கும் இடையில் பயணிகள் படகு சேவையை ஆரம்பிக்க இந்தக் கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (எ)

## ஜனாதிபதி...

விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவை தீர்மானித்துள்ளது. அரசாங்கத்துக்கு எத்தனை தேவைகள் இருந்தாலும் 2024 வரவு -செலவுத் திட்டத்தின் மூலம் கூடுதல் நிதி ஒதுக்கீடுகளைப் பெற முடியாது. கடந்த நான்கு தசாப்தங்களாக ஓர் அரசாங்கத்தின் அன்றாட அலுவல்களை மேற்கொள்வதற்குப் போதுமான வருமானம் இருக்கவில்லை என்பதையும் இங்கு நினைவுகூர வேண்டும்.

எதிர்வரும் 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை தயாரிக்கும் போது, யார் அரசாங்கத்தை வழிநடத்தினாலும் அவர்கள் 2028 வரை சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட கடன் ஒப்பந்தங்களை பேண வேண்டும். இதன்படி, 2025 ஆம் ஆண்டளவில், வெளிநாட்டு வள இடைவெளி சர்வதேச பரிவர்த்தனைகளுக்கு போதுமானதாக இருக்காது. கடந்த வருட அனுபவத்தின்படி அதற்கு 5 இலட்சத்து ஆயிரத்து 800 கோடி அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

மேலும், அடுத்த வரவு - செலவு திட்டத்தைத் தயாரிக்கும் எந்த அரசாங்கமும் இந்த நிதியை ஈடுசெய்ய வேண்டும். அதற்காக சர்வதேச நாணய நிதியம் 66. 3 கோடி டொலர்களை நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் வழங்க இணங்கியுள்ளது. இதன்போது, வரவு - செலவு திட்ட பற்றாக்குறையை ஈடுசெய்ய சர்வதேச நாணய நிதியம் 70 கோடி அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் என்ற ரீதியில் மேற்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஆட்சிக்கு வர எதிர்பார்க்கும் தரப்பினர்கள் செயல்படுவார்களா? இல்லையா? என்பதை நாட்டுக்குத் தெரிவிக்க வேண்டும். அதன்படி, சர்வதேச ஒத்துழைப்பை எதிர்பார்க்காத எந்தவொருவருக்கும் நாட்டின் எதிர்கால வரவு- செலவுத் திட்டத்துக்கு வேறு மாற்றுவழி கிடையாது - என்றார்.

## இந்திய பிரதமர்...

இலங்கை வருகை குறித்து அமைச்சர் ஜெய்சங்கர் ஜனாதிபதியிடம் வெளிப்படுத்தினார்.

முன்னதாக நேற்று முன்தினம் ராஷ்டிரபதி பவனில் நடந்த பிரதமர் மோடியின் பதவியேற்பு விழாவில் பங்கேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரை இலங்கைக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சஜித்தின்...

உதவிகளையும் வழங்கி வருகிறார்.

நேற்றைய தினம்வட மராட்சியின் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, கொற்றாவத்தை அ. த. க. பாட சாலைகளுக்கு உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்வுகளில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சுதந்திர கட்சியின் அங்கஜன் இராமநாதன், தமிழ் அரசு கட்சியின் சுமந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

நிகழ்வுகளில் பங்கேற்ற இருவரும் சஜித் பிரேமதாஸ மாணவர்களுக்காக முன்னெடுத்து வரும் கல்விப் பணியை பாராட்டினர். (ஐ-02)

## வீட்டுச் சுவர்...

நேற்று முன் தினம் மாலை சுமார் 5 மணியளவில் வீட்டில் உட்பகுயில் உள்ள கற் சுவர் குழந்தையின் மீது வீழ்ந்துள்ளது.

இதில் குழந்த படுகாயமடைந்த நிலையில், உடனடியாக வீட்டார் குழந்தையை மீட்டு வவுனியா பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர்.

எனினும், குறித்த 2 மாதக் குழந்தை உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜனாதிபதி தேர்தலில் ரணிலுக்கு ஆதரவளிப்பதாக அறிவிக்கவில்லை!

கொழும்பு, ஜூன் 11

ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்பதாகவும் - அவருக்கு ஆதரவு வழங்குவதாகவும் எந்நிலையிலும் குறிப்பிடவில்லை. பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெற வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம் - இவ்வாறு சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய ஒருங்கிணைப்பாளர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள பெரமுன கட்சியின் தலைமைப் பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், எதிர்வரும் நவம்பர் மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். ஜனாதிபதி தேர்தலை இலக்காகக் கொண்டு தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிக்கும் பணிமனையை ஆரம்பித்துள்ளோம். எதிர்வரும் நாட்களில் சகல தேர்தல் தொகுதிகளிலும் தேர்தல் பிரசார கூட்டங்களை நடத்த தீர்மானித்துள்ளோம்.

நல்லாட்சி அரசாங்கம் முறையற்ற வகையில் பிற்போட்ட மாகாண சபைத் தேர்தல் பற்றி தற்போது எவரும் பேசுவது கிடையாது. மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் படுதோல்வி அடைவதை முன்கூட்டியதாக அறிந்தே நல்லாட்சி அரசாங்கம் தேர்தல் முறைமை திருத்தம் ஊடாக தேர்தலை பிற்போட்டது.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் இறுதி தீர்மானத்தை எடுத்துள்ளோம். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு வெகுவிரைவில் அந்தத் தீர்மானத்தை அறிவிப்பார். எமது தீர்மானத்தை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இடைக்கால ஜனாதிபதியாகவே தெரிவு செய்தோம். நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு ஆதரவு வழங்குவதாகவும் அல்லது அவரை வேட்பாளராக களமிறக்குவதாகவும் நாங்கள் எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை - என்றார். (ஐ)

## தமிழ் அரசு...

இந்த சந்திப்பில், தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், நிர்வாக செயலாளர் சே. குலநாயகம் ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

## கச்சதீவு சர்ச்சை...

சீர்குலைத்துவிடும். இந்த அச்சத்தை உருவாக்கியமைக்காக பிரதமர் மோடியும் அவரின் தரப்பினரும் மன்னிப்பு கேட்கத் தயாரா?", என்றும் கேள்வி எழுப்பினார்.

அத்துடன், பாரதிய ஜனதா கட்சி மிகவும் பொறுப்பற்ற அறிக்கைகளை வெளியிட்டு வரலாற்றை சிதைத்துள்ளது - என்றும் அவர் சாடினார். (ஐ)

## மண்டைதீவு...

செய்யப்பட்ட மீனவர்களின் உறவினர்கள், கிறிஸ்தவ மதகுருமார்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

1986 ஜூன் 10ஆம் திகதி குருநகர், இறங்குதுறையில் இருந்து கடற்றொழிலுக்கு சென்ற மீனவர்கள் 31 பேர் மண்டைதீவு கடலில் வைத்து கடற்படையினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## நிலுவையில் இருக்கும் 11 இலட்சம் வழக்குகள்

கொழும்பு, ஜூன் 11

இலங்கையில் சுமார் பதினொரு லட்சம் வழக்குகள் நிலுவையில் இருப்பதாக நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியல் அமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டில் இலங்கையில் மொத்தமாக 11 இலட்சத்து 22 ஆயிரத்து 133 வழக்குகள் தீர்ப்பு வழங்கப்படாது நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல ஆண்டுகளாக வழக்குகள் நிலுவையில் இருப்பது நீதிமன்றத் துறை எதிர்நோக்கும் பாரிசவா லாக கருதப்படுகின்றது.

நீதவான் நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களில் அதிகளவு வழக்குகள் நிலுவையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வழக்கு விசாரணைகளை மேற்கொள்ள போதியளவு நீதிபதிகள் இல்லாமையினால் இவ்வாறு வழக்குகள் நிலுவையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2015ஆம் ஆண்டில் சுமார் ஏழு லட்சம் வழக்குகள் நிலுவையில் இருந்ததாகவும் கடந்த 2023ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 11 லட்சமாக உயர்வடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் நாட்டில் ஒரு மில்லியன் மக்களுக்கு 19 நீதிபதிகள் என்ற அடிப்படையில் நீதிமன்றங்கள் இயங்கி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## சென்னை விமான நிலையத்தில் தங்கத்துடன் சிக்கிய இலங்கையர்

சென்னை, ஜூன் 11

சென்னை விமான நிலையத்தில் வைத்து இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

பெருந்தொகை தங்க நகைகளை கடத்த முற்பட்ட வேளையில் சுங்க அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார்.

13.5 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதன் பெறுமதி சுமார் ஒன்பது கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் இருந்து வந்த இலங்கையரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட இண்டிகோ விமான நிறுவன ஊழியர் ஒருவருடன் சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாரிய தங்க கடத்தல் கும்பல் ஒன்றுடன் தொடர்புடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# வேலையற்ற பட்டதாரிகளை சந்தித்தார் சஜித் பிரேமதாஸ

### பாராளுமன்றில் பேசுவதாக உறுதி

யாழ்ப்பாணம், ஜூன் 11

**யாழ்ப்பாணத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட வேலையற்ற பட்டதாரிகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சந்தித்து கலந்துரையாடியதுடன் பாராளுமன்றில் குறித்த விடயம் தொடர்பாக பேசுவதாகவும் வாக்குறுதியளித்தார்.**



வடக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்று கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டம் நடைபெற்ற பகுதிக்கு வந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது எமது ஆட்சி உருவாகும்போது கல்வித் துறையில் சீர்திருத்தம் கொண்டு வருவதாகவும், மாற்றுத் திறனாளிப் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளர் உமாச் சந்திரபிரகாஷ் உள்ளிட்ட அமைப்பாளர்களும் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)





# பருத்தித்துறை வைத்தியசாலை ஊழியர்கள் நேற்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நுழைந்து கடமையில் இருந்த தாதிய உத்தியோகத்தரை நபரொருவர் தாக்கிய சம்பவத்தைக் கண்டித்து வைத்தியசாலையின் ஊழியர்கள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த பேராட்டம் நேற்று மதியம் 12 மணி முதல் ஒரு மணி வரையான உணவு இடைவேளையில் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 8ஆம் திகதி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் 7ஆம் இலக்க விடுதியில் கடமையில் இருந்த தாதிய உத்தியோகத்தரை சந்தேக நபர் தாக்கியுள்ளார்.

நடத்தப்பட்ட தாக்குதல்

இந்நிலையிலேயே, குறித்த சம்பவத்தைக் கண்டித்து வைத்தியசாலையின் தாதிய உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள், தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இணைந்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இதன்போது, "உத்தியோகத்தர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்து, ஆயுதம் தாங்கிய பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்து மற்றும் சம்மந்தப்பட்ட குற்றவாளியை கைது செய்" போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

மேலும், குறித்த போராட்டத்தில் நூற்றுக்கணக்கான வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.(02)

# இலங்கையின் அணு மின் உற்பத்தித்துறை; முதலீடுகளில் அதிக ஆர்வம் காட்டும் சீனா


கொழும்பு, ஜூன் 11

இலங்கையின் அணு மின்சார உற்பத்தித்துறையிலும் முதலீடுகளை மேற்கொள்ளும் முயற்சிகளில் சீனா ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே, அணு மின் உற்பத்தியை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டத்திருத்தம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் முயற்சிகளை முன்னெடுத்து வருவதுடன் இலங்கை அணுசக்தி சபை, வருங்கால முதலீட்டாளர்களிடமிருந்து திட்டங்களை எதிர்பார்க்கிறது.

இந்தநிலையில், சீனாவின் தேசிய அணுசக்தி கழகத்தின் பிரதிநிதிகள், இது குறித்து கலந்துரையாட இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னதாக, இலங்கையின் அணு



ஆலைக்கான திட்டங்களை சமர்ப்பித்த அமைப்புகளில் சீனாவின் சி.என்.என்.சி நிறுவனமும் உள்ளடங்கியுள்ளது.

அது மாத்திரமன்றி, ரஸ்யாவின் ரோசாடோமை, பிரான்சின் லெக்ட்ரிகிட் டி பிரான்ஸ மற்றும் டென்மார்க்கின் சீபோர்க் ஆகிய அமைப்புக்களும் தமது திட்டங்களை சமர்ப்பித்துள்ளன.

இதற்கிடையில், இலங்கை அரசாங்கத்தின் இந்த திட்டத்துக்கமைய, அண்மையில், சர்வதேச அணுசக்தி நிறுவன நிபுணர்களின் குழு, ஏழு நாள் பாதுகாப்பு மதிப்பாய்வுகளை நடத்தியது.

இதன் மூலம், அணு மின் நிலையங்களை உருவாக்குவதற்கான சாத்தியமான தளங்களை, அந்த நிறுவனம் அடையாளம்கண்டுள்ளது.

இதனையடுத்து, வருங்கால முதலீட்டாளர்களிடமிருந்து ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்காக சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வர முயற்சிக்கப்படுவதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அமெரிக்காவின் அல்ட்ரா அணுசக்தி கழகம் மற்றும் கனடாவின் அணுசக்தி கனடா லிமிடெட் ஆகியவையும் இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொலிஸ் திணைக்களம் சுயாதீனமாக்கப்படும்!

### அனுரகுமார கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 11

பொலிஸ் திணைக்களம் சுயாதீனமான நிறுவனமாக மாற்றப்படும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மஹரகமவில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தின் அதிகாரிகளின் உரிமையாளர்களாக அரசியல்வாதிகள் இருக்கக்கூடாது என அவர் வலியுறுத்தினார்.

தமது ஆட்சியின் கீழ் எதிர்காலத்தில் பொலிஸ் திணைக்களம் மட்டுமன்றி ஒட்டு மொத்த அரச இயந்திரமும் அரசியல் கைப்பாவைகளாக செயற்படுவது தவிர்க்கப்படும் என அவர் சுட்டிக்காட்டினார்.

பொலிஸ் திணைக்களத்தின் சுயாதீனத்தன்மையையும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் கௌரவத்தையும் உறுதி செய்யக் கூடிய வகையில் ஆட்சி முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரிகள் தேசிய மக்கள் சக்தியில் இணைந்து கொள்வதனை தடுக்கும் முனைப்புக்களில் ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஈடுபட்டு வருவதாக அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.